முரசொலி பாசறை

மதுரை 29.12.2024

# கலைஞரும் நானும்

102

"முத்தமிழறிஞர் கலைஞர் ஐயா, தமிழ் மீதும் தமிழறிஞர்கள் மீதும் கொண்டிருந்த பற்றினை அறிந்தவன் நான்." –கலைஞருடனான தனது நினைவுகளைப் பகிர்கிறார் பேராசிரியர் சாலமன் பாப்பையா.



# 'தமிழ் நிற்கக் கூடாதுய்யா!'

**பேராசிரியர் சாலமன் பாப்பையா**

"என் பள்ளிக்கூட நாட்களில் இருந்தே மதுரை, வைகை ஆற்றில், தமுக்கம் மைதானத்தில், திலகர் திடலில் நடைபெறும் அவரது கூட்டங்களை ஓடி ஓடிச் சென்று கேட்பது வழக்கம்.

### 'பேச்சாளர்களின் யுகம்'

படிக்கும் காலத்தில் தமிழ் மீது இருந்த ஆர்வம் காரணமாக,, கலைஞர் ஐயாவின் பேச்சு பேரறிஞர் அண்ணாவின் பேச்சு இவற்றையெல்லாம் பொதுக் கூட்டங்களுக்கு சென்று ஒன்று விடாமல் கேட்போம். அப்போது இருந்த காலம் பேச்சாளர்களுக்கான ஒரு காலமாக இருந்தது. **'பேச்சாளர்களின் யுகம்'** என்றே அதைச் சொல்லலாம்.

கலைஞர் அவர்களின் பேச்சுக்குத் தனி மதிப்பும் மரியாதையும் வசீகரமும் உண்டு. பேச்சில் தனிமுத்திரை பதித்தவர். பேச்சு மட்டுமல்ல, அவரது திரைப்பட வசனங்கள் பட்டிதொட்டியெங்கும் ஒலித்தவை. **'மந்திரிகுமாரி', 'மனோகரா' 'பராசக்தி'** படங்களின் வசனங்களால் தமிழ் மக்களைக் கட்டிப் போட்டவர். அப்போது நடைபெற்ற கோவில் திருவிழாக்கள், கல்யாண வீடுகளில் இந்தத் திரைப்படங்களின் கதை வசனங்கள் ஒலிபரப்பாகும். எந்த வேலையாகப் போனாலும் அதை மறந்து, அவற்றை அசையாது நின்று கேட்பது என்னுடைய வழக்கம்.

### மணிக்கணக்காக கேட்போம்

அப்போதெல்லாம் தமிழாசிரியர்களுக்குள் ஒரு வழக்கம். பள்ளி ஆண்டு விழாக்களில் ஓரங்க நாடகங்கள் போடும் போது 'மந்திரிகுமாரி' 'மனோகரா' பட வசனங்கள்தான். பெரும்பாலும், மனோகரா படத்தின் வசனங்கள்தான் இடம்பெறும் இல்லாவிட்டால், ராஜா ராணி படத்தில் இடம்பெறும் 'சாக்ரடீஸ்' நாடகத்தை ஓரங்க நாடகமாகப் போடுவோம் தமிழாசிரியர்களுக்குள்ளும் மாணவர்களுக்குள்ளும் தமிழ்ப் பற்றை வளர்த்ததற்கு ஐயாவினுடைய நாடகங்கள் பெரும்பங்கு வகித்தன.

நான் படித்தது, மதுரை அமெரிக்கன் கல்லூரி பள்ளிக்கூடத்தில், நான் பணியாற்றியது அமெரிக்கன் கல்லூரியில். எங்கள் கல்லூரியின் முதல்வர் செல்லப்பா அவர்கள் தமிழ் இலக்கிய மன்றக்கூட்டங்களுக்கு கலைஞரய்யாவை அழைப்பது வழக்கம். அப்போது, அமெரிக்கன் கல்லூரியில் நான் பணியாற்றி வருகின்றேன். அப்போதிருந்தே அவர் மீது எனக்கு தனி ஈடுபாடு உண்டு.

### முதல் அறிமுகம்

அதன் பிறகு, நான் பட்டிமன்றங்கள் பேசச் தொடங்கி விட்டேன். ரஜினிகாந்த் நடித்த 'ராஜாதி ராஜா' என்ற திரைப்படம் பெருவெற்றி பெற்றதற்கான பாராட்டு விழா நடைபெற்றது. விழாவில், பேச என்னையும் அழைத்து இருந்தார்கள். கலைஞர் அவர்களும் வந்தி ருந்தார். நான் மேடையில் ரஜினிகாந்த் பேசுவது போல் பேசி காண்பித்ததைப் பார்த்து, மிகவும் சிரித்தார். ரசித்தார். அதுதான் எனக்கும் ஐயாவுக்குமான முதல் அறிமுகம்.

ஒருமுறை மதுரையில், ராஜா முத்தையா செட்டியார் மன்றம் சார்பில், கலைஞர் அவர்கள் எழுதிய நூல் ஒன்றின் வெளியீட்டு விழா நடைபெற்றது. எனக்கும் அழைப்பு வந்திருந்தது. விழாவுக்கு என்னை அழைத்துச் செல்ல 'கார் அனுப்புகிறோம்' என்று கூறினார்கள். நான் கார் வரும் என்று எதிர்பார்த்தேன். ஆனால், கார் கடைசிவரை வரவே இல்லை. அதனால் விழாவுக்கு, என்னால் செல்ல முடியவில்லை. நானும் வீட்டிலேயே இருந்து விட்டேன்.



எனக்கு கார் அனுப்பாததற்கு அதில் ஏதோ ஒரு மறைமுக அரசியல் பின்னணி இருந்தது என்பது எனக்கு பின்னர் தெரியவந்தது. மற்றொரு முறை கலைஞர் அவர்களை நான் சந்தித்தபோது, 'ஏன் வரவில்லை' என நினைவில் வைத்துக் கேட்டார். உட்கட்சி அரசியலை நான் கூறியதும், அரசியலில் இருந்தவர் அல்லவா, எளிதாகப் புரிந்து கொண்டார்.

நான் சன் தொலைக்காட்சியில் காலையில் 'திருக்குறள்' சொல்வேன். அந்த நிகழ்ச்சி என்னை மிகவும் பிரபலப்படுத்தியது. ஒரு நாள் என் வீட்டிற்கு அதிகாலையிலேயே ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது.

என் வீட்டு அம்மாதான் அந்தத் தொலைபேசி அழைப்பை எடுத்து இருக்கிறார்கள். அப்போது நான் பல் துலக்கிக் கொண்டு இருந்தேன். ஐயாவின் உதவியாளர் சண்முகநாதன் பேசியிருக்கிறார். இவருக்கு அவர் யார் என்று தெரியவில்லை. பிறகு, அவர் முதல்வர் கேட்கிறார் என்று கூறியதும், பதறி அடித்துக் கொண்டு வந்து என்னிடம் சொன்னார். அப்போது நானும் அவசர அவசரமாக என் வேலைகளை முடித்துக் கொண்டு அந்தத் தொலைபேசியை அணுகினேன். "காலையிலே திருக்குறள் சொல்றீங்க. ரொம்ப நல்லா இருக்குய்யா... வீட்டுல உள்ளவங்க எல்லாம் பாக்குறாங்க. ரொம்ப நல்லா இருக்கு" என்று பாராட்டினார்.

> **தமிழை வளர்ப்பதற்காக எங்கெங்கெல்லாம் அறிஞர் பெருமக்கள் இருக்கிறார்களோ அவர்களையெல்லாம் தேடிப் போய் பாராட்டுவதில் அவர் முதல் நபராக இருந்தார்!**

### தமிழ் மீது மாறாத பற்று

அவரே என்னை அழைத்துப் பாராட்டியது எனக்கு மிகப்பெரிய மகிழ்ச்சியாக இருந்தது. ஏனென்றால், அவருடைய உயரம் என்ன? நான் ஒரு கல்லூரிப் பேராசிரியர். அவர் மாநிலத்தின் முதல்வர். என் பேச்சை, அவர் கேட்டுவிட்டு என்னைப் பாராட்டுவது எனக்குப் பெரு மகிழ்வைத் தந்தது. அதுவும் அது எனக்கான பாராட்டு மட்டுமல்ல. தமிழ் மீது அவர் கொண்ட பற்றின் காரணமாக, என்னைப் பாராட்டினார் என்றுதான் அதை எடுத்துக் கொள்ள வேண்டும். தமிழ் மீது மாறாத பற்றும் அலாதியான ஆர்வமும் கொண்டவர் அவர்.

கலைஞர் அவர்கள் எழுதிய 'தொல்காப்பியப் பூங்கா' நூல் வெளியீட்டு விழாவிற்கு என்னை அழைத்து இருந்தார்கள். தமிழில் அது வித்தியாசமான முயற்சி. 'தொல்காப்பியம்' என்பது புலவர்களின் கையில் இருக்க வேண்டிய ஒரு நூல். அதை பாமரரின் கைகளுக்குக் கொண்டு சேர்த்த பெருமை கலைஞர் அவர்களையே சேரும். அதனால், அவரைப் பாராட்ட வேண்டியது நம்முடைய கடமை என்று குறிப்பிட்டுப் பாராட்டினேன். இப்படிப்பட்ட சிந்தனை வேறு எவருக்குமே தோன்றாது. அது ஐயா ஒருவருக்குத்தான் தோன்றும். அதைப் பாராட்டிப் பேசுகின்ற வாய்ப்பு எனக்குக் கிடைத்தது நான் பெற்ற பேறு என்றுதான் சொல்ல வேண்டும்.

அதன் பிறகு செம்மொழி ஆய்வுக் குழுவில் என்னையும் அவர் உறுப்பினராகச் சேர்த்து இருந்தார். எனக்கு அவர் பெரிய பெரிய வாய்ப்புகளை அவ்வப்போது ஏற்படுத்தித் தந்து கொண்டே வந்தார்.

### முதல் நபராக இருந்தார்

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் சார்பாக, எனக்கு ஒரு பாராட்டு விழா நடத்தி, 'தமிழை பாமர மக்களிடம் எல்லாம் கொண்டு சேர்ப்பவர்' என என்னைப் புகழ்ந்து பாராட்டினார். கூடவே கலைமாமணி விருதையும் எனக்கு அளித்தார். இப்படி தமிழை வளர்ப்பதற்காக எங்கெங்கெல்லாம் அறிஞர் பெருமக்கள் இருக்கிறார்களோ அவர்களையெல்லாம் தேடிப் போய் பாராட்டுவதில் அவர் முதல் நபராக இருந்தார்.

ஒரு முறை அவர் மதுரை வந்த போது அவரைச் சந்தித்து, ஒரு பிரச்சினையை ஒரு மனுவாகக் கொடுத்துப் பேசிக்கொண்டிருந்தேன். அப்போது அங்கு மதுரை ஆட்சியர் உள்ளே வந்தார். நான் ஆட்சியர் உட்காரட்டும் என்று எழுந்து நின்றேன். உடனே ஐயா அவர்கள், 'நீங்க உக்காருங்க. தமிழ் நிற்கக் கூடாதுய்யா' என்றவர், என்னை அமரச் சொல்லிவிட்டார். என்ன ஒரு பண்பாடு என்று பாருங்கள் எப்பேர்ப்பட்ட பண்பாடு என்று பாருங்கள். இப்படிப்பட்ட ஒரு தலைவனை ஒரு முதல்வனை வேறு எங்கும் பார்க்க முடியாது.

தமிழ் மீது அவருக்கு இருந்த ஆர்வம். திருக்குறள் மீது இருந்த ஆர்வம் அளப்பரியது. கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை திறப்பின் போது என்னையும் அவர் அந்த விழாவுக்கு அழைத்திருந்தார். அந்த விழாவில் திருவள்ளுவரையும் திருக்குறளின் பெருமையையும் பற்றி நான் பேசுவதைப் பொறுமையாகக் கேட்டு பாராட்டினார். பிறகு, என்னுடைய திருக்குறள் உரைக்கு அவர் அணிந்துரை அளித்து, அதில் என்னை வெகுவாகப் பாராட்டி இருந்தார். இப்படி பல காலம் அவரோடு நான் சேர்ந்து பயணித்திருக்கிறேன். அவருடைய நெஞ்சத்து இருப்பில் இருந்தேன் என்பது எனக்கு வாழ்நாள் பேறு. அதேபோல் 'மதுரைக்காஞ்சி' என்ற ஒரு நூலை வெளியிட்டேன். அதற்கு தற்போதைய முதலமைச்சர் அணிந்துரை வழங்கியிருந்தார். இருவரது நட்பும் கிடைத் திருப்பதைவிட, வேறு என்ன பெருமை வேண்டும்!".

....பகிர்வார்கள்

**தொகுப்பு : எஸ்.கதிரேசன்**

## நாட்டு மக்கள் அறிவார்கள்!

அண்ணா பல்கலைக்கழக பாலியல் வன்கொடுமை வழக்கில் கைது செய்யப்பட்ட குற்றவாளி, சென்னை கோட்டூர்புரத்தைச் சேர்ந்தவர். ஆனால், அதே பெயரில் சென்னை சைதாப்பேட்டையில் இருக்கும் தி.மு.கழக நிர்வாகியைத் தேடிப்பிடித்து, அவதூறு பரப்பிக் கொண்டிருக்கின்றனர் சிலர். தி.மு.க. நிர்வாகியின் வீடுதேடிச் சென்று அவருடைய ஆதார் அட்டை வரை படம்பிடித்து, அவதூறு பரப்பும் கும்பலின் உள்நோக்கத்தை அம்பலப்படுத்தியிருக்கிறார்கள், யூடியூபர்கள்.


இவ்விவகாரம் குறித்து, திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி வெளியிட்டுள்ள அறிக்கையில் முன்வைத்துள்ள கருத்துகளும், கேள்விகளும் முக்கியமானவை "அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் மாணவி பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டது சமூகப் பிரச்சினை. அதை அரசியல் பகடைக்காயாக மாற்றுவது தவறு. இந்தியத் துணைக்கண்டம் முழுமைக்கும் பெண்களுக்கு எதிராக நடைபெறும் குற்ற வழக்குகளின் எண்ணிக்கை ஒரு லட்சத்து 65 என்றால், தமிழ்நாட்டில் வெறும் 24 தான்.

பாலியல் வன்புணர்வு வழக்குகளின் தேசிய சராசரி 4.6 விழுக்காடு; தமிழ்நாட்டிலோ 0.7 விழுக்காடுதான். மற்ற மாநிலங்களோடு ஒப்பிடும்போது, தமிழ்நாடு கட்டுக்குள்தான் இருக்கிறது" என்று கூறியிருக்கிறார்.

மேலும், "இரண்டாண்டுகளாக அண்ணா பல்கலைக்கழகத்துக்குத் துணைவேந்தர் கிடையாது. இதற்குக் காரணம் யார்? அரசுக்கு முட்டுக்கட்டை போடுபவர் யார் என்பதைப் பற்றி அரசியல் கட்சிகள் விமர்சிக்க வேண்டாமா? வேந்தர் என்பவரின் ஒத்துழையாமைதானே! மாணவி பாலியல் வன்கொடுமை என்று சொல்லுகிறபோது – இந்த நிர்வாகச் சீர்கேட்டைப் பற்றியும் விமர்சிக்க வேண்டாமா?'' என்ற கேள்வியையும் அவர் எழுப்பியிருக்கிறார்.

இன்றைக்கு தி.மு.க. அரசுக்கு எதிராகக் கம்பு சுற்றும் அ.தி.மு.க.வும், பா.ஜ.க.வும் பிரிஜ்பூஷண் விவகாரத்திலும், பொள்ளாச்சி கூட்டுப் பாலியல் வன்கொடுமை வழக்கிலும், மணிப்பூரில் 2 பெண்கள் நிர்வாணமாக்கப்பட்டு நாட்டை உலுக்கிய சம்பவத்திலும் எத்தனை போராட்டங்களை நடத்தினார்கள் என்ற ஆசிரியர் கி.வீரமணியின் கேள்வியும் முக்கியமானது. அப்போது கள்ள மவுனம் சாதித்த இவர்கள், இப்போது குற்றவாளியை ஒரே நாளில் காவல்துறை கைது செய்துவிட்ட பிறகும் அரசியலுக்காக நாடகமாடுகிறார்கள் என்பதை நாட்டு மக்கள் அறிவார்கள்.

## ஃப்ளாஷ்பேக்



எஸ்.வி.எஸ்.சாகுல் ஹமீது



### கழக முன்னோடிகளின் நினைவில்...

1960 கால கட்டத்தில் மேடைப் பேச்சு, சினிமா, நாடகங்கள், பாட்டுக் கச்சேரி, பட்டிமன்றம் எனப் பட்டிதொட்டி எங்கும் கழகம் பரபரப்பாக இயங்கிய காலம். கிலோ அரிசி ஒரு ரூபாய்! பாட்டுக் கச்சேரிக்கான நுழைவுக் கட்டணம் இரண்டு ரூபாய். பெண்களுக்கு நுழைவுக் கட்டணம் நாலணா (25 காசு) எனக் கழகம் மக்களோடு மக்களாக இயங்கியது. கொங்குப் பகுதியில், 'நாகூர் அனிபா' அவர்களின் பாட்டுக் கச்சேரி எங்கு இடம்பெற்றாலும், என்னுடைய தந்தை எஸ்.வி.சக்கரை அவர்களே நிதிப் பொறுப்பாளர். அப்படி 11/01/1961 அன்று எனது தந்தை எஸ்.வி.எஸ். அவர்கள் நாகூர் அனிபா அவர்களுடன் எடுத்துக்கொண்ட புகைப்படம் இது. உடுமலை, 'பிரவோ' தியேட்டரில் அன்று கூடிய கூட்டம் இன்று வரை, கழகத்தின் மூத்த முன்னோடிகளின் நினைவில் இடம் பிடித்திருக்கும்.

**– எஸ்.வி.எஸ்.சாகுல் ஹமீது,**
**மாவட்டத் தொண்டர் அணித் தலைவர், திருப்பூர் தெற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### சிவாஜியை வாழ்த்திய அண்ணா!

23.09.1957 அன்று சென்னை இராஜா அண்ணாமலை மன்றத்தில் பேரறிஞர் அண்ணா தலைமையில், சிவாஜி கணேசன் நடித்த 'கட்டபொம்மன்' நாடகம் நடைபெற்றது. சிவாஜி கணேசன் அவர்கள் தி.மு.க.வில் இருந்து விலகியிருந்த சமயம் அது. இருந்தாலும், அண்ணா அந்த விழாவில் பங்கேற்று, "தம்பி கணேசா, நீ எங்கிருந்தாலும் வாழ்க!"என்று மனதார வாழ்த்தினார். நன்றி தெரிவித்துப் பேசிய சிவாஜி, "சாதாரண கணேசனாக இருந்த என்னை, சிவாஜி கணேசனாக மாற்றியவர் அண்ணா" என்று நெகிழ்ந்தார்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

704

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.